## மாங்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24.06.2024ம் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகராட்சி நகரமன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக் கூட்டப்பொருள் நடவடிக்கை விவரம்.

**குறள்:** அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

**விளக்கம்**: அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை:

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் மார்ச் 2024 ஏப்ரல் 2024 மற்றும் மே 2024 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான மார்ச் 2024 ஏப்ரல் 2024 மற்றும் மே 2024 மாதங்களுக்கானவரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

"**சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம்** (Street Vendors Welfare)

தகுதியானசாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்."

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022ல், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன்படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 109 நபர்கள் உள்ளனர் எனக்

கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்..20789/2021/UPA, நாள்.07.06.2024ல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | -- | 1(தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | -- | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | -- | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | -- | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | -- | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | -- | 1 |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பின் பிரதிநிதிகள் | -- | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | -- | 1 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமன்ம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 1069 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர் | -- | 1 |
| (2) | இதர பிற்படுத்தப்பட்டோர் | -- | 1 |
| (3) | மகளிர் | -- | 1 |
| (4) | மாற்றுத்திறனாளி | -- | 1 |

| | | | |
|---|---|---|---|
| (5) | சிறுபான்மையினர் | -- | 1 |
| (6) | பொது | -- | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3) ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர விற்பனைக் குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்க்காணும்படி நடத்த நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

(**தேர்தல் நடைபெறும் இடம்** :- **நகராட்சி அலுவலகம், மாங்காடு**

| | | |
|---|---|---|
| வேட்பு மனுக்கள் பெறப்படும் நாள் (காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை) | | 18.06.2024 முதல் |
| வேட்பு மனு விண்ணப்பம் செய்யும் இறுதி நாள் | | 26.06.2024 மாலை 03.00 மணிக்குள் |
| வேட்பு மனு பரிசீலனை செய்யும் நாள் (காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை) | | 26.06.2024 |
| வேட்பு மனு திரும்ப பெறும் நாள் (காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை) | | 28.06.2024 |
| வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | | 28.06.2024 மாலை 05.00 மணிக்கு |
| தேர்தல் நடைபெறும் நாள் | | 10.07.2024 |
| வாக்கு பதிவு நடைபெறும் இடம் | | மாங்காடு நகராட்சி அலுவலகம் |
| தேர்தல் நடைபெறும் நேரம் | | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி முடிய |
| வாக்கு எண்ணிக்கை நாள். | | 10.07.2024 |

அலுவலக குறிப்பு

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி தேர்தல் நடத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் தோராய செலவினம் ரூ.300000/- நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சியில் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் துணை நீதி மன்றங்களில் வரப்பெறும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக வழக்கை எடுத்து நடத்தும் வழக்கறிஞர்களுக்கு தொகையினை வழங்கவும் மற்றும் எதிர்வாதத்தினை தயார் செய்யவும் தோராய செலவினமாக ரூ.**200000/–** பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு **:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.6**

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.03.07.2007ல், நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு குத்தகை விடப்பட்டு ஒவ்வொரு 9 ஆண்டுகள் முடிவடைந்ததும், தற்போதைய சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கோ.எண்.15316/2016/ஆர்3 நாள்.29.11.2016 எண்ணிட்ட சுற்றறிக்கையில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களை தலைவராக கொண்ட கண்காணிப்புக்குழுவினை ஏற்படுத்தி நேராய்வு செய்து 9 ஆண்டுகள் முடிவுற்ற குத்தகை இனங்களுக்கு தற்போதைய சந்தை மதிப்பீட்டில் குத்தகை மறு நிர்ணயம் செய்து குத்தகைதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கி, குத்தகைதாரர்களுக்கு ஒப்படைப்பது அல்லது அவர் ஒப்புக் கொள்ளாத பட்சத்தில் பொது ஏலம் விடப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.576 நாள்.29.03.2010ன்படி நகராட்சிக்கு சொந்தமான 14 கடைகளுக்கு 2009-2010ம் ஆண்டிற்கு முன்னர் குத்தகை விடப்பட்ட தொகையில் இருந்து 5 சதவிகிதம் உயர்த்தி கீழ்க்கண்ட விவரப்படி கடை வாடகை 2010-2011ம் ஆண்டு முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| S. No | Allotment No | Name | Shop Address | Old Rent Rs. | PWD rate | 15% increased old | Present market | Highest Rent | GST | Total Rent |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | | rent | value | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 180/BD01/00001 | VIJAYA / விஜயா | NATIONAL RURAL EMPLOYEMENT PROGRAME SHOP-2 | 986 | 2210 | 2542 | 2710 | **2710** | **488** | **3198** |
| 2 | 180/BD01/00005 | INDHIRANI / இந்திராணி | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 4 | 2404 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 3 | 180/BD01/00006 | THIRIPURA SUNDARI / திரிபுர சுந்தரி | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 5 | 2622 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 4 | 180/BD01/00004 | MANOGARAN / மனோகரன் | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 3 | 2185 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 5 | 180/BD01/00003 | SANTHI, PUSHPA / சாந்தி, புஷ்பா | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM EMPLOYE MENT COMMERCIAL SHOP 2 | 2404 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 6 | 180/BD01/00002 | PREMKUMAR, RAVICHANDRAN / பிரேம்குமார் ரவிச்சந்திரன் | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP 1 | 2185 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 7 | 180/BD01/00007 | DHANASEKARAN / தனசேகரன் | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 11 | 1204 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 8 | 180/BD01/00008 | GUNASEKARAN / குணசேகரன் | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 10 | 1354 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 9 | 180/BD01/00009 | MANIKANDAN / மணிகண்டன் | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 9 | 1202 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 180/BD01/00010 | THILLAIKUMAR / தில்லைகு மார் | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 6 | 2114 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 11 | 180/BD01/00011 | RAMESH / ரமேஷ் | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 8 | 1762 | 3150 | 3623 | 3650 | **3650** | **657** | **4307** |
| 12 | 180/BD01/00012 | SELVAM / செல்வம் | ANAITHU PERURATCHI ANNA MARUMALARCHI THITTAM SHOP NO 7 | 1938 | 3534 | 4064 | 4034 | **4064** | **732** | **4796** |
| 13 | 180/BD01/00013 | RANGANATHAN / ரங்கநாதன் | NATIONAL RURAL EMPLOYEMENT PROGRAME SHOP-3 | 950 | 2210 | 2542 | 2710 | **2710** | **488** | **3198** |
| 14 | 180/BD01/00014 | M.R. MUTHU / ரா முத்து | NATIONAL RURAL EMPLOYEMENT PROGRAME SHOP | 986 | 2210 | 2542 | 2710 | **2710** | **488** | **3198** |

ஆனால், தற்போது 14 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் இந்நகராட்சியின் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் உள்ள 11 கடைகள் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் உள்ள 3 கடைகள் மொத்தம் 14 கடைகளை மறு அளவீடு செய்யப்பட்டு, ஏற்கனவே உள்ள வாடகை தொகையின் 15% உயர்வு தொகை மற்றும் பொதுப்பணித்துறை விலைவிகிதம் PWD schedule of rate மற்றும் இன்றைய சந்தை மதிப்பீடு ஆகிய இவற்றில் எது உயர்வு தொகையோ, அந்த வாடகையினை. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமிக்கப்படும் குழுவின் நேரடி ஆய்விற்குபின், வாடகை மறு நிர்ணயம் செய்து குத்தகைதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கி, குத்தகைதாரர்களுக்கு ஒப்படைப்பது அல்லது அவர் ஒப்புக் கொள்ளாத பட்சத்தில் பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது..

**அ.கு**- மன்றம் அனுமதிக்கலாம்

### பொருள் எண்.7

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.03.07.2007ல், நகராட்சியின் குத்தகையினங்களுக்கு 3 ஆண்டுகள் முடிவடைந்ததும், குத்தகை தொகையினை உயர்த்தி மறுஏலம் அல்லது மறுஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு நகராட்சியின் நிதியிலையினை உயர்த்தி வசூல் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான காமாட்சியம்மன் கோயில் அருகில் அமைந்துள்ள நகராட்சி நவீன குளியலறை மற்றும் கட்டணக் கழிப்பிடத்தின் வசூல் உரிமம் இந்நகராட்சியின் ஏலப்பதிவேடு 2018-2019ன்படியும், நகர்மன்றத்தீர்மானம் எண்.253 நாள்.28.11.2018ன்படி திரு.ஏ.வெங்கடேஷ் என்பவருக்கு ஒரு ஆண்டிற்கு குத்தகை தொகை ரூ.58500/- என நிர்ணயித்து ஏலம் விடப்பட்டுள்ளது. தற்போது 6 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், மேற்கண்ட குத்தகையினத்திற்கு மறுஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி ஏதும் கோரப்படாமல் உள்ளது நகராட்சிக்கு நிதியிழப்பினை ஏற்படுத்தியுள்ளது.

எனவே மேற்படி காமாட்சியம்மன் கோயில் அருகில் அமைந்துள்ள நகராட்சி நவீன குளியலறை மற்றும் கட்டணக் கழிப்பிடத்தின் வசூல் உரிமம் 2024-2025ம் ஆண்டிற்கு 15.07.2024ம் தேதிமுதல் குறுகிய கால ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, உச்ச ஏலத்தொகை கோரும் ஏலதாரருக்கு குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளவும், புதியதாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நாள் வரையில் தற்காலிகமாக மேற்கண்ட குத்தகைதாரர் திரு.ஏ.வெங்கடேஷ் என்பவரே மேற்படி குத்தகையினத்திற்கு வசூல் செய்துக் கொள்ள உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது..

அ.கு- மன்றம் அனுமதிக்கலாம்

## பொருள் எண்.8

அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன்படி, இந்நகராட்சி பேரூராட்சியாக இருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு ஆகியோர்களால் நடத்தப்படும் மாதாந்திர மற்றும் வாராந்திர அல்லது தினசரி ஆய்வுக்கூட்டங்கள் அனைத்தும் தற்போது காணொளி மூலமாகவே நடத்தப்படுகிறது, மேலும் தினசரி உயர் அலுவலர்களால் கோரப்படும் இமெயில் கூகுள் ஷீட் விவர அறிக்கைகள், ஆன்லைன் பதிவுகள் மற்றும் நகராட்சியால் பராமரிக்கப்படும் அனைத்து இனங்களையும் கணிணிமயமாக்கப்பட்டு, CFC வழியாகவே ஆன்லைன் மூலமாக பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது இந்நகராட்சியில் உள்ள கணிணிகள் மிகவும் சாதாரணமானதாகவும், காணொளி கூட்டங்களில் கலந்துக் கொள்ள ஏதுவான கேமரா மற்றும் ஸ்பீக்கர் வசதிகள் ஏதுமில்லாமலும் உள்ளது. மேலும் மிகவும் அடிப்படையான Configuration கொண்டதாகவும் உள்ளது. இதனால், காணொளி கூட்டங்களில் கலந்துக் கொள்வதிலும். அன்றாடம் உயர் அலுவலகங்களில் இருந்து கேட்கப்படும் அறிக்கைகள் அனுப்புவதிலும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

எனவே, நிர்வாக நலன் கருதி Advanced Technology கொண்ட கீழ்க்கண்ட விவரப்படியான 7 எண்ணிக்கை கணிணிகளை Gem Rate-ன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிக் கோரி வாங்கிடவும், இதற்கான தோராய செலவினம் ரூ.9.50 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**HP 60.5 cm(23.8) All-in-One Desktop PC- 7 Nos**

- 12th Generation Intel® Core™ i5 processor & Windows 11 Pro
- 60.5 cm (23.8) diagonal, FHD anti-glare, 250 nits, 72% NTSC display with Intel® Iris® Xe Graphics & 8 GB DDR4 RAM & 512 GB SSD Solid State Drive
- HP 125 Wired Keyboard, 5 MP camera, 1 HDMI 1.4 Intel® Core™ i5-1235U (up to 4.4 GHz with Intel® Turbo Boost Technology, 12 MB L3 cache, 10 cores, 12 threads 1 power connector; 1 RJ-45; 1 HDMI 1.4; 1 Super Speed USB Type-A & Graphics Intel® Iris® Xe Graphics Memory And Storage 8 GB memory; 512 GB SSD storage Video Connectors1 HDMI 1.42.

அ.கு- மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் எண்.9

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான தீர்மானப்புத்தகம், பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் படிவங்கள் 2024-2025ம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.9.50 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சொசைட்டியில் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் எண்.10

தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோவை அவர்களின் ந.க.எண். 399/2023/அ2 நாள்.14.03.2024 (ம) ந.க.எண்.047/2024/அ2 நாள்.22.05.2024 எண்ணிட்ட கடிதங்களில், 2021-2022ம் ஆண்டு முதல் 2024-2025ம் ஆண்டுகளுக்கான மாங்காடு நகராட்சியின் பங்கு தொகை ஆண்டிற்கு ரூ.30000/- வீதம் மொத்தம் ரூ.1,20,000/-ஐ செலுத்த கோரப்பட்டுள்ளது. அதன்படி 2021-2022ம் ஆண்டு முதல் 2024-2025ம் ஆண்டுகளுக்கான இந்நகராட்சியின் பங்குத் தொகை ரூ.120000/-ஐ தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.11

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டப்பணிகள், வரிவசூல் தொடர்பான விவரங்கள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், பிறப்பு இறப்பு பதிவுகள் மற்றும் பிற தொடர்புடைய முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் அவ்வப்போது நடத்தப்படும் ஆய்வுக்கூட்டங்களுக்கு தேவையான அறிக்கைகளை உரிய நேரத்தில் பிரிண்ட் எடுப்பதற்கு போதுமான பிரிண்டர்கள் இவ்வலுவலகத்தில் இல்லாததால், உரிய நேரத்தில் அறிக்கைகள் அனுப்ப இயலாமல் காலதாமதம் ஏற்படுதால், HP Laser all in one Printer (A4 Black and White Laserjet Printers) Print, copy, scan Prints up to 42/40 ppm (LTR/A4) Apple AirPrint™, Ethernet, Mopria™, USB, Wi-Fi®, Bluetooth Touch screen specifications கொண்ட பிரிண்டர்கள் 7 எண்ணிக்கையில் நிர்வாக நலன் கருதி, Gem Rate-ன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிக் கோரி வாங்கிடவும், இதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் எண்.12

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான நோட்புக், கவர், பைல்பேட், மூடுதாள் உள்ளிட்ட எழுதுபொருட்கள் 2024-2025ம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.5.00 லட்சம் மதிப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சொசைட்டியில் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் எண்.13

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளில் ஒப்பந்ததாரர்களின் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் சேவை வரி தொகையினை உரிய தலைப்புகளில் செலான் மூலம் செலுத்தவும் மற்றும் செலுத்தப்பட்ட வருமான வரி மற்றும் சேவை வரி உள்ளிட்ட தொகைகளுக்கான E-Filing பணி மேற்கொள்ளவும் Accounting Agency நிறுவனமான ஸ்ரீஹரி கன்ஸ்சல்டன்ட் என்பவருக்கு கீழ்க்கண்ட விவரப்படியான தோராய செலவினம் ரூ.96.000/-திற்கு மன்றத்தின் அனுமதிக்காக மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| TDS for Non Salary for a Quarter ending (Rs.6000 x 4 quarter) | | Rs.24000 |
| GSTR7 (contractor payment) filing a Month (Rs.3000x12 months) | - | Rs.36000 |
| GSTR7 (Nontax) filing a Month (Rs.3000x12 months) | - | Rs.36000 |
| Total | - | Rs.96000 |

அ.கு- மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.14**

மாங்காடு நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் வீடுகள் மற்றும் வணிக வளாகங்களில் குப்பைகள் தரம் பிரித்து சேகரிக்கும் பணிக்கு கடந்த 08.05.2023ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு M/s.சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் (பி) லிட், சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நாளொன்றுக்கு சேகரிக்கப்படும் குப்பையின் அளவு 17. 42 MT ஆகவும், ஒரு மெட்ரிக் டன் குப்பை சேகரம் செய்ய ரூ.4144 /- என்ற விலை விகிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரால் நிர்ணயம் செய்யப்பட்டு கடந்த ஓராண்டு காலமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்காணும் விவரப்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வரும் நிறுவனம் தினசரி சேகரம் செய்யப்படும் குப்பையின் அளவு நகராட்சி நிர்வாக ஆணையரால் நிர்ணயிக்கப்பட்ட அளவினைவிட மிகவும் கூடுதலாக இந்நகராட்சியில் உற்பத்தியாவதால் தினசரி சேகரிக்கும் குப்பையின் அளவை மறுநிர்ணயம் செய்து தரக் கோரியதின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.436/2024/அ3 நாள்.30.04.2024-ல் தெரிவித்துள்ளபடி திருவேற்காடு நகராட்சி துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோரால் மாங்காடு நகராட்சி பகுதியில் 01.05.2024 முதல் 16.05.2024 வரை (5.5.2024 ஆம் நாள் தவிர ) 15 தினங்கள் தினசரி உற்பத்தியாகும் மற்றும் சேகரிக்கப்படும் குப்பையின் எடை அளவீடு செய்து அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

மேற்படி ஆய்வறிக்கையில் கணக்கீடு செய்யப்பட்ட நாளொன்றுக்கு 24.68 MT என்ற அறிக்கையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் ஆய்வறிக்கை பரிசீலிக்கப்படும்பட்சத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் கூடுதல் எடைக்கான தொகையினை பொதுநிதியில் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.15**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவின் வாயிலாக நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினந்தோறும் உருவாகும் குப்பைகளை தூய்மை பணியாளர்கள் வாயிலாக தரம் பிரித்து வாங்கப்பட்டு இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள MCC மையத்தில் உரம் தயாரிக்கும் பணிகள், பிளாஸ்டிக் அரைக்கும் பணிகள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பொருட்களை இயந்திரம் கொண்டு கட்டி பிற பயன்பாட்டிற்கு அனுப்பும் பணிகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களை மக்கும் குப்பைகளை அரைக்கும் இயந்திரம், பிளாஸ்டிக் அரைக்கும் இயந்திரம், பிளாஸ்டிக் பெய்லிங் இயந்திரம் ஆகியன பயன்படுத்தி பணிகள் மற்றும் கொசு புகை ஒழிப்பு இயந்திரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் இயந்திரங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.**300000/–** பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.16**

இந்நகராட்சியின் 2023-2024ம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆண்டு கணக்குகள் கணிணியில் தொகுத்து உரிய படிவங்களில் பூர்த்தி செய்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை செங்கல்பட்டு அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், மேற்படி பணிகளை செய்யும் நிறுவனங்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட விவரப்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய RMS Account Consultant என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி, பணி முடித்தமைக்கும், அதற்கான செலவினம் ரூ.1,50,000/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண | வேலையின் விவரம் | ஒப்பந்ததாரர் விவரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | 1. Compiletion and Data entry work for Journal Book for the Annual Accounts.<br>2. Compiletion and Data entry work for General Ledger for the Annual Accounts.<br>3. Preparation of Trail Balance.<br>4. Balance sheet Data Entry and printout charges for year 2023-2024 | RMS Account Consultant<br>(ஆர்.முனுசாமி)<br>நெ.1 4வது மெயின் ரோடு<br>வெங்கடேஸ்வரா நகர், இராமாபுரம்,<br>சென்னை-8 | குறைவு |
| | | Cursor Solution<br>நெ.30/4. எல்லையம்மன் கோயில் தெரு, வண்ணாந்துரை, அடையார் | அதிகம் |
| | | JB Soft System<br>நெ.28 கிழக்கு ஜோன்ஸ் ரோடு,<br>சைதாபேட்டை, சென்னை-15 | அதிகம் |

அ.கு- தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதி, பணி உத்திரவு வழங்கி பணி முடித்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.17**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் DBC பணியாளர்களை பணியமர்த்த விலைப்புள்ளி கோரியதை தொடர்ந்து கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை | விகிதம் |
|---|---|---|---|
| 1 | டிரைட் இன்ஃபிரா டெக் | 655 | 0.5% |
| 2 | புலுமிங் ரீசைக்கில்ஸ் | 648 | 1.6% |

| | | | |
|---|---|---|---|
| 3 | துளசி எண்டர்பிரைசஸ் | 496 | 25% |

மேற்கண்ட வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள டிரைட் இன்ஃபிரா டெக் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி 0.5% குறைவாக கொடுத்துள்ளனர். வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள புலுமிங் ரீசைக்கில்ஸ் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி 1.6% குறைவாக கொடுத்துள்ளனர். வரிசை எண்.3ல் குறிப்பிட்டுள்ள துளசி எண்டர்பிரைசஸ் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி 25 ரூ குறைவாக வழங்கப்பட்டுள்ளது. எனவே வரிசை எண் 3ல் காணும் நிறுவனம் தகுதி பெறாது. வரிசை எண் 2ல் உள்ள புலுமிங் ரீசைக்கில்ஸ்ர். நிறுவன விலைப்புள்ளியில் 1.6% குறைவாக கொடுத்துள்ளதால் ஒப்பந்தவிதிப்படி மேற்படி நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க தேர்வு செய்யவும் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.18

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என்று தரம் பிரித்து வாங்கும் பணிமேற்கொள்ள பொதுசுகாதார நடவடிக்கை பணிகளுக்காக M/s. சீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனம் மூலம் வெளிக்கொணர்வு (out Sourcing) மூலம் துப்புரவு பணியாளர்கள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது., பொது மக்களின் சுகாதார நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தோடு 10 சதவீதம் அதிக படுத்தி வழங்கவும் 08.05.2024 முதல் 07.05.2025 வரை ஓராண்டு காலத்ததிற்கு பணி நீட்டிப்பு வழங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 290.00/- லட்சம் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பு ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.19

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பொதுசுகாதார பணிகள் பின்வரும் விவரப்படியான பொருட்கள் சப்ளை செய்ய தோராய செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் மற்றும் எண்ணிக்கை | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | பொதுசுகாதார பிளிச்சீங் பவுடர், சுண்ணாம்பு நீர் மற்றும் பினாயில் போன்ற கிருமி நாசினிகள் சப்ளை செய்தல் | 9.50 |
| 2 | பொதுசுகாதார ப் பணிக்கு தேவையான கூடை, மலார் மற்றும் பொது சுகாதாரப் | 9.50 |

| | | |
|---|---|---|
| | பொருட்கள் சப்ளை செய்தல் | |
| 3 | நகராட்சியில் அவ்வப்போது ஏற்படும் தேவைக்கேற்ப அடிப்படையில் ஜேசிபி இயந்திரம் வாடகை அடிப்படையில் அமர்த்திக்கொள்ள | 9.50 |
| 4 | கொசு ஒழிப்பு கைதெளிப்பான் இயந்திரத்திற்கு தேவையான கேஸ் சிலிண்டர் சப்ளை செய்தல் | 2.00 |

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.20**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொசு ஒழிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்படும் Temepose. Pyrathrum மற்றும் bactiside ஆகிய மருந்துகள் 2024-2025 ஆம் ஆண்டிற்கு தேவைப்படுவதாலும், தற்போது மழைக்காலம் என்பதாலும் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிககமாக உள்ளதால் தகுதி பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்திடவும் அதற்கான செலவினத்தொகை ரூ.9,50,000/-ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :– மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.21**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் பொது பிரிவு பணியாளர்களுக்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது எனவே அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருற்நது கொள்முதல் செய்திடவும் அதற்கான செலவினத்தொகை ரூ.1,00,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.22**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மை இந்தியா திட்டம் (SBM2.0) செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஒரு பகுதியாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி (IEC) நடத்தப்பட்டு வருகிறது. குப்பைகளை தரம் பிரித்தல், உரம் தயாரித்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல் மற்றும் சுகாதார கல்வி வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன . மேற்கண்ட நிகழ்ச்சிகளுக்கு hand bills, flex,banners ,T,shirt and cap மற்றும் அவ்வப்போது அறிவிக்கப்படும் அரசின் அறிவிப்பு மற்றும் திட்டத்தின்படி நிகழ்ச்சிகளுக்கு தேவைப்படும் பொருடகள் மற்றும் நகராட்சியில் தயார் செய்யப்படும் இயற்கை உரம் விற்பனை செய்திட ஏதுவாக Manure Bag ஆகிய பொருட்களை 2024-25 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்திடவும் அதற்கான செலவினத்தொகை ரூ.5,00,000/- ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.23**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெருக்களில் பொது சுகாதார பிரிவின் வாயிலாக திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணியினை தனியார் மயம் வாயிலாக வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினந்தோறும் உருவாகும் குப்பகைளை தரம்பிரித்த மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வாங்கப்படுகிறது .

அவ்வாறு தரம் பிரித்து வாங்கப்படும் குப்பைகளை நகரில் உள்ள நுண்ணுர செயலாக்க மையம் (MCC) கொண்டு சென்று உரம் தயாரித்தல் பணிகள் மற்றும் வளம்மீட்பு மையம்(RRC) கொண்டு சென்று மறுசுழற்சி செய்ய இயலாத பொருட்களை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்புதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. நமது நகராட்சியில் இரண்டு புதிய MCC மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று RRC மையத்தில் பணிபுரிய 6 தூய்மை பணியாளர் தேவைப்படுகின்றனர். எனவே 3 மையங்களுக்கும் 18 தூய்மை பணியாளர் தேவைப்படுகின்றனர். தற்போது நமது நகராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் குறைவான அளவில் உள்ளனர். எனவே மேற்கண்ட மூன்று MCC மற்றும் RRC மையங்களில் உரம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. ஆனால் தற்போது மேற்காணும் பணிகள் மேற்கொள்வது அவசியமாக ஒன்றாகும்.

எனவே MCC மற்றும் RRC மையங்களில் பணிகள் மேற்கொள்ள 18 தூய்மை பணியாளர்களை தனியார் மயம் மூலம் பணியமர்த்த வேண்டியுள்ளது எனவே 18 தூய்மை பணியாளர்களை மாவட்ட ஆடசியர் அவர்களின் தினக்கூலி விலைவிகிதத்தின் அடிப்படையில் 2024-2025 ஆம் ஆண்டிற்கு மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாயிலாக நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.36.00/- இலட்சம் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.24**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட சக்ராநகர் நடுநிலைப் பள்ளியில் முதல் தளத்தில் உள்ள மூன்று வகுப்பறைகள் ஆர்.சி.சி கூரையில் மழைநீர் கசிவு ஏற்படுவதால், அதனை சரி செய்யவும், இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.25**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, அப்பாவுநகர் பகுதியில் உள்ள பழைய சாலை சரிவாக அமைக்கப்பட்டுள்ளதால், மழைக்காலங்களில் மழைநீர் குடியிருப்பு வீடுகளுக்குள் புகுந்து விடுவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். அதன்படி மேற்கண்ட அப்பாவு நகர் பழைய சாலையை உயர்த்தி புதிய சிமெண்ட் சாலையாக அமைக்க ரூ. 9.50/- இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதி 2024-2025ல் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

### பொருள் எண்.26

மாங்காடு நகராட்சி பகுதியில் நான்கு மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் உள்ளூர் நீராதரங்களான ஆழ்துளைக்கிணறுகளில் மின்மோட்டார் பொருத்தி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மாங்காடு நகராட்சி பகுதிகளில் 620 குடிநீர் இணைப்புகள் வருடந்தோறும் கேட்புஎழுப்பப்பட்டு, குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. புதிய குடிநீர் இணைப்புகள் வேண்டி பொதுமக்கள் விண்ணப்பிக்கும் போது நடப்பாண்டில் (2024-25) அதற்கான கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதில் சாலை சீரமைப்புகட்டணம் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.748/08/குவச, நாள்.21.09.2009ல் வழங்கப்பட்ட வழி முறைகளின் படியும், சென்டேஜ் (நூற்றுவீத) கட்டணம் மற்றும் வைப்புத்தொகை ஆகியவை மாங்காடு பேரூராட்சி குடிநீர் வழங்குதல் துணைவிதிகள் குறித்த திருத்த அறிவிக்கை 2019ன்படியும், விண்ணப்பகட்டணம் ஏற்கனவே உள்ளதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>(அ) புதிய வீட்டு குடிநீர் இணைப்புகள்</u> (அட்டவணை-1)

| வ. எண். | கட்டண விபரம் | 0 – 30 மீட்டர் தூரம் வரை | | 31 – 90 மீட்டர் தூரம் வரை | |
|---|---|---|---|---|---|
| | | தார் சாலை (ரூபாய்) | சிமெண்ட் சாலை (ரூபாய்) | தார் சாலை (ரூபாய்) | சிமெண்ட் சாலை (ரூபாய்) |
| 1 | விண்ணப்ப கட்டணம் | 250 | 250 | 250 | 250 |
| 2 | வைப்புத்தொகை | 5000 | 5000 | 5000 | 5000 |
| 3 | சாலை வெட்டி சீரமைத்தல் (மதிப்பீட்டில் உள்ளவாறு) | 4858 | 5586 | 6177 | 6901 |
| 4 | சென்டேஜ் (நூற்றுவீத) கட்டணம் (மதிப்பீட்டில்உள்ளவாறு) | 3203 | 3349 | 6886 | 7031 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | மேற்பார் வைக்கட்டணம் | 500 | 500 | 500 | 500 |

(ஆ) புதிய வணிக பயன்பாட்டிற்கான குடிநீர் இணைப்புகள் (அட்டவணை-2)

| வ. எண். | கட்டண விபரம் | 0 – 30 மீட்டர் தூரம்வரை | | 31 – 90 மீட்டர் தூரம்வரை | |
|---|---|---|---|---|---|
| | | தார் சாலை (ரூபாய்) | சிமெண்ட்சாலை (ரூபாய்) | தார் சாலை (ரூபாய்) | சிமெண்ட்சாலை (ரூபாய்) |
| 1 | விண்ணப்ப கட்டணம் | 250 | 250 | 250 | 250 |
| 2 | வைப்புத்தொகை | 7500 | 7500 | 7500 | 7500 |
| 3 | சாலை வெட்டி சீரமைத்தல் (மதிப்பீட்டில்உள்ளவாறு) | 4858 | 5586 | 6177 | 6901 |
| 4 | சென்டேஜ் (நூற்றுவீத) கட்டணம் (மதிப்பீட்டில் உள்ளவாறு) | 3203 | 3349 | 6886 | 7031 |
| 5 | மேற்பார்வைக்கட்டணம் | 500 | 500 | 500 | 500 |

(இ) புதிய தொழிலக பயன்பாட்டிற்கான குடிநீர் இணைப்புகள் (அட்டவணை-3)

| வ. எண். | கட்டணவிபரம் | 0 – 30 மீட்டர் தூரம்வரை | | 31 – 90 மீட்டர் தூரம்வரை | |
|---|---|---|---|---|---|
| | | தார் சாலை (ரூபாய்) | சிமெண்ட்சாலை (ரூபாய்) | தார் சாலை (ரூபாய்) | சிமெண்ட்சாலை (ரூபாய்) |
| 1 | விண்ணப்ப கட்டணம் | 250 | 250 | 250 | 250 |
| 2 | வைப்புத்தொகை | 10000 | 10000 | 10000 | 10000 |
| 3 | சாலை வெட்டி சீரமைத்தல் (மதிப்பீட்டில்உள்ளவாறு) | 4858 | 5586 | 6177 | 6901 |
| 4 | சென்டேஜ் (நூற்றுவீத) கட்டணம் (மதிப்பீட்டில் உள்ளவாறு) | 3203 | 3349 | 6886 | 7031 |
| 5 | மேற்பார்வைக்கட்டணம் | 500 | 500 | 500 | 500 |

அலுவலகக்குறிப்பு: 2024-25ம் ஆண்டில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்காக அட்டவணை 1, 2, 3ல் கண்டுள்ளவாறு புதிய கட்டணங்களை மன்றம் ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்கலாம்

பொருள் எண்.27

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பட்டூர் முஸ்லீம் தொடக்கப்பள்ளி, வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் (இ) படப்பை அவர்களின் கடிதம் நக.எண்.6279/2022/அ2, நாள்.12.03.2024ன்படி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் மூலம்

பராமரிக்கப்பட்டு வந்த ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (முஸ்லீம்), பட்டூர் பள்ளிக்கட்டிடங்கள் மற்றும் பள்ளி சமையலறை கூடம் ஆகியவை மாங்காடு நகராட்சிக்கு 26.03.2024 அன்று உரிய ஆவணம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட தொடக்கப்பள்ளி வளாகத்தில் கழிப்பிட வசதி மற்றும் சுற்று சுவர் ஏற்படுத்தப்படவில்லை என்பதால்அதற்கு ரூ.41.60 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஏதேனும் ஒருதிட்ட நிதியில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு ந.க.எண்.951/2024/இ1, நாள்.03.06.2024 அன்று கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

1) குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் மூலம் கட்டப்பட்ட பட்டூர் பள்ளிக்கட்டிடம் மற்றும் சமையலறை கூடம் ஆகியவை ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3) மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து வேறு திட்டப்பணியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டால், திட்ட நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.28**

மாங்காடு நகராட்சி பகுதிகளில் தற்போது குடிநீர் ஆதாரமான ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து குடிநீர் பெறப்பட்டு தினமும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனை மேம்படுத்த சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திடம் இருந்து நகராட்சி பகுதிகளுக்கும் (மாங்காடு நகராட்சி உள்பட) கிராம பஞ்சாயத்துகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்ய, பிரதானவளைய வடிவகுழாய் (Ring Main) திட்டப்பணி மூலம் மேற்கொள்ள விருப்பதாக, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிர்வாக இயக்குநர் அவர்களின்கடிதம்எண்.CMWSSB/PRD/PDCV-Ring Main / Stakeholder Meeting / Spl/2023, நாள்.07.07.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாங்காடு நகராட்சி பகுதிக்காக, மாங்காடு 'ஆ' கிராமம், சர்வே எண்.561, 562ல் (ஜீவாநகர்பூங்கா) வருவாய் துறையினர் மூலம் அடையாள மிடப்பட்டு அங்கே குடிநீர் தொட்டிஅமைக்கப்பட்டு மாங்காடு நகராட்சி மற்றும் அருகாமை கிராம பஞ்சாயத்துகளின் குடிநீர் தேவைக்கேற்ப மொத்தமாக வழங்கி அங்கிருந்து மேற்கண்ட அனைத்து பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) மேற்கண்ட ஜீவாநகர் பூங்காவில் குடிநீர் தொட்டி அமைக்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.29**

மாங்காடு நகராட்சிக்குட்பட்டபகுதிகளில் 2014ம் ஆண்டுக்கு முன்பாக கட்டப்பட்டு தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள சமுதாய கழிப்பிடங்களை புதுப்பித்து சீரமைக்க தூய்மை பாரததிட்டம் (நகரகம்) 2.0 வழிகாட்டு நெறிமுறைகளின் படி நிதியுதவி வழங்கப்படும் என இணை இயக்குநர் / தேசியதிட்டஇயக்குநகர், தூய்மை பாரததிட்டம் அவர்கள் தனது நேர்முக கடிதம் எண்.15/43/2018-SBM-1, நாள்.21.02.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாங்காடு நகராட்சியின் 2014ம் ஆண்டுக்கு முன்பாக கட்டப்பட்டு தற்போது பழுதடைந்த கழிப்பிடங்களை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில் 2 எண்ணிக்கை சமுதாய கழிப்பிடங்கள் (16 இருக்கைகள்) பழுதடைந்த நிலையில் உள்ளதாக கண்டறியப்பட்டது. அதன்படி கீழ்க்கண்ட இடங்களில் உள்ள பழுதடைந்த சமுதாய கழிப்பிடங்கள் சீரமைக்களடுத்துக்கொள்ளப்பட்டது.

| வ.எண் | கழிப்பிடம் அமைவிடம் | சமுதாய கழிப்பிடம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | எண் | இருக்கை | தூய்மை பாரத திட்டத்தில்ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. இலட்சம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சம் | மீதமுள்ள தொகை ரூ. இலட்சம் |
| 1 | வார்டு எண்.15, மேல்ரகுநாதபுரம் சமுதாய கழிப்பிடம் சீரமைப்பு செய்தல். | 1 | 8 | 6.00 | 12.40 | 6.40 |
| 2 | வார்டு எண்.23, கே.கே.நகர் சமுதாய கழிப்பிடம் சீரமைப்பு செய்தல். | 1 | 8 | 6.00 | 9.50 | 3.50 |
| | **மொத்தம்** | **2** | **16** | **12.00** | **21.90** | **9.90** |

மேற்கண்ட இரண்டு சமுதாய கழிப்பிடங்கள் சீரமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு ந.க.எண்.600/2022/இ1, நாள்.10.05.2024ல் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி முன்மொழிவுகள் அனுப்பியதை மன்றம் ஏற்கலாம்.

மேற்கண்ட இரண்டு சமுதாய கழிப்பிடங்கள் சீரமைக்க ரூ.21.90 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் தூய்மை பாரத திட்டத்தின்ஒதுக்கீடு ரூ.12.06 இலட்சம் (இருக்கைக்கு ரூ.0.75 இலட்சம்) போகமீதமுள்ளதொகை ரூ.9.90 இலட்சம் 2024-25ம் ஆண்டு நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) பழுதடைந்த நிலையில் உள்ள இரண்டு சமுதாய கழிப்பிடங்களை தூய்மை பாரத திட்டம் (நகரகம்) 2.0ல் சீரமைக்க, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட இரண்டு சமுதாய கழிப்பிடங்களை சீரமைக்க தூய்மை பாரத நிதி போக மீதமுள்ளதொகை ரூ.9.90 இலட்சத்தை 2024-25ம்

ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>பொருள் எண்: 30</u>

மாங்காடு நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய திரு.D.வாசுதேவன் த/பெ.துரைசாமி எண்.13, மணலிசரவணாநகர், மாங்காடு, சென்னை–600122 என்பவர் தனது சொத்து மதிப்பு சான்று மற்றும் இதரஆவணங்கள் அளித்துள்ளார். எனவே திரு.D.வாசுதேவன் என்பவரை இந்நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–மன்றம்அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்: 31</u>

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 சாதிக் நகரில் உள்ள சிறிய சந்துகள் மற்றும் தெருக்களில் பேரூராட்சியாக இருந்தபோது பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டது. அதில் பல தெருக்களில் முறையான மழைநீர் சாய்வான வடியும் அமைப்பு இல்லாத காரணத்தால் மழைநீர் தேங்கியவாறு உள்ளது. இது பொதுமக்களுக்கு பெரும் சிரமமாக உள்ளது. இதனை தவிர்க்கும் வண்ணம், அந்த பேவர் பிளாக் கற்களை அகற்றி, அதன் கீழ் அடுக்கில் ரப்பிஸ் கொட்டி அதன் மேல் WMM ஒரு அடுக்கு போட்டு மழைநீர் வடியுமாறு சாய்வு அமைத்து அதன் மேல் அடுக்கில் பேவர் பிளாக் மறுபடியும் பயன்படுத்தி 250 மீட்டர் 200 மீட்டர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிகளுக்கு ரூ.11.20 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பேவர்பிளாக் சாலையை மறுசீரமைத்து அமைக்க மன்றத்திற்கு பொருள் வைத்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : 1) அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான செலவினம் ரூ.11.20 இலட்சத்தை 2024-25ம் ஆண்டு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>பொருள் எண்: 32</u>

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோடை வெப்பம் அதிகரித்து ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்துவிட்டது. அதில் கீழ்க்கண்ட ஆழ்துளைக் கிணறுகள் நீரின்றி வறண்டுள்ளதாலும், அருகிலுள்ள கால்வாய் நீர் இறங்கி மாசுபட்டதாலும் அந்த ஆழ்துளைக் கிணற்றுக்கு மாற்றாக அருகில் புதிய ஆழ்துளைக் கிணறு புவியியல் வல்லுநர் ஆலோசனையின்பேரில் அமைக்கவும் அதற்கு கீழ்க்கண்ட விபரப்படி மதிப்பீடு தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். அடிசன் நகர் பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து புதிய மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி செய்தல். | 2.50 |
| 2 | வார்டு எண்.4, திருப்பதி நகரில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து புதிய மின்மோட்டர் பொருத்தி குடிநீர் வசதி செய்தல். | 2.50 |
| 3 | நகராட்சி அலுவலக வளாகத்தில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து புதிய மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி செய்தல். | 2.00 |
| 4 | வார்டு எண்.15, செல்வராஜ் நகரில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து பழைய மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி செய்தல். | 2.00 |
| 5 | வார்டு எண்.16, சிவானந்த நகர் பூங்காவில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து புதிய மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்தல். | 2.50 |
| | மொத்தம் | 11.50 |

மேற்கண்ட பணிகள் குடிநீர் அத்தியாவசிய பணி என்பதால் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : 1) மேற்கண்ட ஐந்து பணிகளை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>பொருள் எண்: 33</u>**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பின்வரும் பகுதியில் புதிய ஆழ்துளைக்கிணறு அமைத்து அதே பகுதியில் புதிய 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட RO Plant அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக்கொடுக்க நகர்மன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததால் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு அனுமதியும் அதற்கான செலவினத்திற்கு ஒப்புதல் வேண்டியும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | RO Plant அமைக்க வேண்டிய பகுதிகள் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.2 பெருமாள் கோயில் தெரு | 14.00 |
| 2 | வார்டு எண்.3 சக்தி நகர் | 14.00 |
| 3 | வார்டு எண்.4 மீரா நகர் பகுதியில் | 14.00 |
| 4 | வார்டு எண்.5 பத்திரிமேடு | 14.00 |
| 5 | வார்டு எண்.6 அடிசன் நகர் | 14.00 |
| 6 | வார்டு எண்.27 ஆர்.எஸ்.ஆர்.கார்டன் | 14.00 |
| 7 | வார்டு எண்.12 சிவானந்தா நகர் | 14.00 |
| 8 | வார்டு எண்.16 அப்பாவு நகர் | 14.00 |
| 9 | வார்டு எண்.17 செல்வகணபதி நகர் | 14.00 |
| 10 | வார்டு எண்.22 எஸ்.எஸ்.கோயில் தெரு | 14.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : 1) மேற்கண்ட பணிகளை அனுமதிக்கலாம்.
2)இதற்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>பொருள் எண்: 34</u>**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல் சையத்சாதிக் நகர் மற்றும் அப்பாவு நகர் பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பிளாட்பாரம் அமைத்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க நகர்மன்ற உறுப்பினர்கள் தெரிவித்தன்படி மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு அனுமதியும் அதற்கான செலவினத்திற்கு ஒப்புதல் வேண்டியும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : 1) மேற்கண்ட இரண்டு பணிகளை அனுமதிக்கலாம்.

2) இதற்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>பொருள் எண்: 35</u>

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26, சாந்தி நகரில் வன்னியர் பட்டு சுடுகாடு சுற்றுச் சுவர் அருகிலுள்ள சந்து மற்றும் அருகிலுள்ள இரண்டு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்து ஆர்.சி.சி சிலாப் மேல்மூடி அமைக்க மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு அனுமதியும் அதற்கான செலவினத்திற்கு 2024-25ம் ஆண்டு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிவேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : 1) மேற்கண்ட பணியை அனுமதிக்கலாம்.

2) இதற்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>பொருள் எண்: 36</u>

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 பாலாஜி தெரு மற்றும் வடக்கு தெருக்களில் மழைகாலங்களில் மழைநீர் தெருக்களில் தேங்கியுள்ளதால், மேல்மூடியுடன் கூடிய ஆர்.சி.சி வடிகால் அமைக்க ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி மேற்கொள்ள அனுமதியும் அதற்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைத்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : 1) மேற்கண்ட பணியை அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட பணி நகராட்சி பொது நிதி 2024-25 பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள அரசின் நிதியுதவி வேண்டி முன்மொழிவுகள் நிதியிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. அது பெறப்பட்டவுடன் அந்த திட்ட நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>பொருள் எண்: 37</u>

**2023–2024**ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பின்வரும் இரண்டு பணிகள் மேற்கொள்ள முதலாம் அழைப்பாக **14.03.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் இரண்டு பணிகளுக்கும் தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றில்

திருவாளர்கள் அமீமு எண்டர்பிரைசஸ் நிறுவனம் வழங்கியுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் முன்வைப்புத் தொகை செலுத்தப்படவில்லை. ஆனால் முதல் பணிக்கு மதிப்பீடு தொகையை விட 0.28% அதிகமாகவும், இரண்டாவது பணிக்கு மதிப்பீட்டு தொகையை விட 0.95% அதிகமாகவும், விலை விகிதம் வழங்கியுள்ளார்.

முன்வைப்புத் தொகை செலுத்தாத காரணத்தால் இவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க இயலாது. எனினும் இப்பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதாக கருத இயலாது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கிய மோகன் கான்டிராக்டர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தெற்கு காமாட்சி நகர் விளையாட்டு மைதானம் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 20.40 | திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.28% அதிகம் |
| | | | திருவாளர் மோகன் கான்டிராக்டர் | மதிப்பீடு தொகையை விட 0.52% குறைவு |
| 2 | வைகுண்டநாதன் தெரு தார்சாலை அமைத்தல் பணி | 9.50 | திருவாளர்மோகன் கான்டிராக்டர் | மதிப்பீடு தொகையை விட 0.13% குறைவு |
| | | | திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.95% அதிகம் |

அலுவலக குறிப்பு :–

1) பெறப்பட்ட இரண்டு பணிகளுக்கான தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் முன்வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளியை ஏற்காமல் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி 15.03.2024ம் தேதியில் பெற்று, குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்: 38**

மாங்காடு நகராட்சியில் குடிநீர் அத்தியாவசிய பணிகளான குடிநீர் பராமரிப்பு பழுது நீக்கம் பணிக்கு தேவையான உதிரி பொருட்கள் சப்ளை செய்தல் (வார்டு எண்.1 முதல் 14 வரை) , (வார்டு எண்.15 முதல் 27 வரை) குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் / விலை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.376, நாள்.30.06.2023ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ள காரணத்தால்,

அதன் தொடர்ச்சியாக அதே ஒப்பந்ததாரர்கள் மூலம் அதே விலை விகிதத்தில் / விலையில் பணி மேற்கொண்டதையும் (வார்டு எண்.1 முதல் 14 வரை) , (வார்டு எண்.15 முதல் 27 வரை) மன்ற அனுமதியை எதிர்நோக்கி மே, ஜுன், ஜுலை 2024 ஆகிய மூன்று மாதங்கள் நீட்டிப்பு செய்ததை அனுமதிக்கவும் வேண்டி நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மேற்கண்ட பணிகள் குடிநீர் பராமரிப்பு பணி என்பதால் மன்றம் ஏற்கனவே

அனுமதித்த விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் மேலும் மூன்று மாத காலத்திற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.523, நாள்.07.03.2024ல் அனுமதித்த மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணி மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>பொருள் எண்: 39</u>**

மாங்காடு நகராட்சியில் வார்டு எண்.25 பட்டூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் ரூ.1.50லட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யவும் அதற்கான செலவினத்தை 2024–2025ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்: 40</u>**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27ல் மசூதி தெரு, வன்னியர்பட்டு சுடுகாடு செல்லும் சாலையில் மழைகாலங்களில் மழைநீர் தெருக்களில் தேங்கியுள்ளதால், மேல்மூடியுடன் கூடிய ஆர்.சி.சி வடிகால் அமைக்க ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி மேற்கொள்ள அனுமதியும் அதற்கான செலவினத்தை 2024-25ம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைத்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** **1)** மேற்கண்ட பணியை அனுமதிக்கலாம்.
